**கடன் சபை - 2015**

கடன் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1973 இன் 33 ஆம் இலக்க கடன் சபை (திருத்த) அதிகாரச்சட்டத்தின் திருத்தப்பட்ட கடன் சபைக் கட்டளைச் சட்டத்தின் (311 ஆம் அதிகாரம்) 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை கடன் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு

நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று கடனாளிகளால் ரூபா 195,000 தொகையான வீடு மற்றும் ஆதனக் கொடுப்பனவுகள் தவிர்க்கப்பட்டிருந்தமையால் அக்கடனை அறவிடுவதற்காக 1980 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளின் போது வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ் வழக்குகள் முடிவடைந்திருக்கவில்லை. அக் கடனுக்காக ஈடு வைக்கப்பட்ட ஆதனங்களின் உரித்துறுதி, அளவீட்டு வரைபடங்கள், பிணை, கடன் பதிவேடுகள் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 31 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து அறவிடப்படாது திரண்ட நிலையில் காணப்பட்ட, வீடு மற்றும் ஆதனக் கடனுக்காகப் பெறவேண்டிய ரூபா 646,702 தொகையான வட்டி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியின் போதும் அறவிடப்படாதிருந்ததுடன் சபையால் அறவிடுதல் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே கடன் உடன்படிக்கைகள், பேரேடுகள், விபரமான பட்டோலைகள், மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 18,650 தொகை மிகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 18,650 ஆக இருந்தது. இச்சபைக்கு அறவிடவேண்டியிருந்த 1980 மற்றும் 1983 ஆம் ஆண்டுகள் முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 195,000 தொகையான வீடு மற்றும் ஆதனக் கடன் மீதிக்குரியதாக வருடாந்தம் சீராக்கப்பட்ட வட்டி வருமானமாக வெளிப்படுத்தப்பட்டது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் சபை 1976 ஆம் ஆண்டின் போது கலைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டு அதன் கண்காணிப்பு நடவடிக்கைகள் 2001 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2001 ஆகஸ்ட் 02 ஆம் திகதி முதல் கலைப்பதற்காக அரச நிதித் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டு வரை 14 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் கலைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்புப் பிரதேச செயலகத்தில் காணப்படும் மாவட்ட நீதிமன்ற வழக்குத் தொடுனர்களின் வைப்புக்களிற்காக இலாபப் பங்கோ அல்லது வட்டியோ தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 23 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.